தேசிய கடன் உத்தரவாத நிறுவனம்

வேலைவாய்ப்பு அறிவித்தல்

தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGIL) என்பது இலங்கை அரசாங்கத்திற்கும், 13 முன்னணி பங்குதாரர் நிதி நிறுவனங்களுக்கும் (Shareholder Financial Institutions - SFIs) இடையிலான அரச மற்றும் தனியார் துறை கூட்டாண்மையின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமாகும். நாட்டின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைக்கு (MSME) ஆதரவளிப்பதே இதன் நோக்கமாகும். தகுதியும் சாத்தியக்கூறும் கொண்ட MSME தொழில்முயற்சிகளுக்கு பணப்புழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கடன் வழங்கலை ஊக்குவிப்பதற்காக, NCGIL ஆனது பங்குதாரர் நிதி நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதங்களை வழங்குகின்றது. இதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிறந்த ஒழுங்கமைப்புத் திறன், முன்முயற்சியுடன் செயல்படும் ஆற்றல், இரகசியத்தன்மையைப் பேணும் திறன், சிறந்த தொடர்பாடல் மற்றும் தனிநபர் உறவாடல் திறன்கள், அத்துடன் விவரங்களில் மிகுந்த கவனம் செலுத்தும் திறன் கொண்ட ஒரு தொழில்முறை நிபுணரை நாம் எதிர்பார்க்கின்றோம். பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு திறம்பட ஆதரவளிப்பதுடன், ஒரே நேரத்தில் பல முன்னுரிமைப் பணிகளை நிர்வகித்து, நிறுவனத்தின் உள் மற்றும் வெளிப்புற பங்குதாரர்களுடன் சிறந்த முறையில் ஒருங்கிணைந்து செயல்படும் ஆற்றலும் கொண்டிருத்தல் வேண்டும்.

நீங்கள் சிறந்த ஒழுங்கமைப்புத் திறன் கொண்டவராகவும், முன்முயற்சியுடன் செயல்படுபவராகவும், நம்பகமான தொழில்முறை நிபுணராகவும் இருந்து, பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு பயனுள்ள ஆதரவை வழங்கத் தயாராக இருந்தால்,

எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்!

முக்கிய தகைமைகள், அனுபவம் மற்றும் பொறுப்புகள்

நிர்வாக உதவியாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் தனிப்பட்ட உதவியாளர்

பணியின் கண்ணோட்டம் (Role Overview)

பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு விரிவான நிர்வாக மற்றும் செயலாளர் உதவிகளை வழங்குதல் இப்பதவியின் முக்கிய பொறுப்பாகும். இதில் கால அட்டவணைகளை நிர்வகித்தல், கூட்டங்களை ஒருங்கிணைத்தல், உத்தியோகபூர்வ கடிதப் பரிமாற்றங்கள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல், இரகசியப் பதிவுகளைப் பராமரித்தல் மற்றும் நிறுவனத்தின் உள் மற்றும் வெளிப்புற பங்குதாரர்களுடன் பயனுள்ள தொடர்பாடலை ஏற்படுத்துதல் ஆகியவை உள்ளடங்குகின்றன.

தொழில்முறை ரீதியான ஒருங்கிணைப்பு, உரிய காலத்தில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் மிக உயர்ந்த இரகசியத்தன்மை மற்றும் விவேகத்தைப் பேணுதல் ஆகியவற்றின் மூலம், பிரதம நிறைவேற்று அதிகாரியின் அலுவலகச் செயற்பாடுகள் தடையின்றியும் வினைத்திறனுடனும் முன்னெடுக்கப்படுவதை இப்பதவி உறுதிப்படுத்துகின்றது.

கல்வித் தகைமைகள் மற்றும் திறன்கள்

- க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பொதுப் ஆங்கிலப் பாடத்தில் சிறப்புச் சித்தி (A) பெற்றிருத்தல் அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில மொழியில் எழுத்து மற்றும் பேச்சுத் திறனில் சிறந்த தேர்ச்சியுடன் கூடிய வலுவான தொடர்பாடல் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- பங்குதாரர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் தொழில்முறை உறவுகளை ஏற்படுத்தி, அவற்றைப் பேணுவதற்கான சிறந்த தனிநபர் உறவாடல் திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி பயன்பாடுகள் மற்றும் Microsoft Office தொகுப்பைப் பயன்படுத்துவதில் சிறந்த அறிவும் தேர்ச்சியும் கொண்டிருத்தல் அவசியமாகும்.
- முகாமைத்துவ உதவியாளர் அல்லது நிர்வாகப் பணிகள் தொடர்பான பதவியில் குறைந்தபட்சம் ஒரு வருட பணி அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கதாகும்.
- சுருக்கெழுத்து (Shorthand Writing) எழுதும் திறன் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வயது 35 வருடங்களுக்குக் குறைவாக இருப்பது விரும்பத்தக்கதாகும்.

தெரிவு செய்யும் நடைமுறை

விரிவான நேர்முகத் தேர்வுச் செயல்முறையின் மூலம் தகுதியான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவுச் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

இப்பதவியில் ஆர்வமுள்ளவர்களும், தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களும், இவ்விளம்பரம் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு (07) நாட்களுக்குள் தங்களது முழுமையான சுயவிபரக் கோவையை (CV) சமர்ப்பிக்க வேண்டும். அதனுடன், விண்ணப்பதாரருடன் உறவுமுறை இல்லாத இரண்டு (02) தனிப்பட்ட பரிந்துரையாளர்களின் (Unrelated Referees) முழுமையான தொடர்பு விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

உங்களது சுயவிபரக் கோவையை PDF வடிவில் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

மின்னஞ்சல்: careers@ncgil.lk

அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ்வரும் முகவரியில் சமர்ப்பிக்கலாம்.

தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (தனியார்) லிமிடெட் (NCGIL)
7ஆம் மாடி, இல. 479, HNB Towers,
டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.